# நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் (நா.க.த.அ) அரசமைப்பு

**முகப்புரை**

சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகளுக்கு மதிப்பு, சனநாயகம், அனைத்து மக்களுக்குமான சமத்துவம் ஆகிய கொள்கைகளுக்கும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கும் **இணங்க,**

தமிழீழ மக்கள் உயிர் வாழும் உரிமையும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யவும் **தீர்மானித்து,**

இலங்கைத் தீவில் அயல் காலனியாதிக்க அரசுகளின் வருகைக்கு முன்பு தமிழ், சிங்களம் என தனித்தனியான இரு சுதந்திர அரசுகள் இருந்தன என்பதைக் **கருத்திற்கொண்டும்,**

தமிழீழ மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமான உறவுகளின் வரலாறு என்பது அடுத்தடுத்து வந்த சிறிலங்கா அரசாங்கங்கள் தமிழர்களுக்கு தாம் கொடுத்த வாக்குறுதிகளை மீறியதும், சிறிலங்கா அரசாங்கக்களுக்கும் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் முறைப்படி செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒருதரப்பாக நீக்கம் செய்ததுமான தொடர் போக்காகவே இருந்துள்ளது என்பதை **அறிந்துணர்ந்து,**

அடுத்தடுத்து வந்து சிறிலங்கா அரசாங்கங்கள் இலங்கைத்தீவு 1948 இல் விடுதலை பெற்றதிலிருந்து தமிழ்களுக்கு எதிராக இனப்படுகொலையும் மானுட விரோதக் குற்றங்களும் போர்க் குற்றங்களும் புரிந்துள்ளன என்பதை **மனத்திலிருத்தி,**

கடந்த 1976ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்குப் பின் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஈழத்தமிழரின் மரவுவழித் தாயகத்தில் தமிழீழ மக்களுக்கான சுதந்திரமும், தமிழ் மக்களின் இறைமையும், மதச்சார்பின்மையும் கொண்ட அரசை மீளவும் நிறுவும்படி தமிழீழ மக்கள் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குக் கட்டளையிட்டார்கள் என்பதைக் **கவனத்திற்கொண்டு**,

சிறிலங்கா அரசாங்கங்களின் மூர்க்கத்தனமும், இலங்கைத் தீவில் தமிழ்களுக்கு அரசியல் இடைவெளி இல்லாமல் போனதும், சேர்ந்து கொண்டதால் தமிழ் மக்கள் அளித்த கட்டளையை நிறைவேற்றுவதற்கான தமிழர் அறவழிப்போராட்டம் பயனற்றுப்போயிற்று என்பதை **மனத்திலிருத்தி**,

சிறிலங்காவின் அரசமைப்பு சட்டங்களிற்கு உட்பட்டு நாற்பதாண்டு காலம் அறவழியிலும், அமைதி வழியிலும் நடைபெற்ற போராட்டங்கள் அதைத்தும் பயனற்றுப்போனதால், தமிழ்களின் தற்காப்பை கருத்தில் கொண்டு சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்காக தமிழ்களின் ஆயுதப் போராட்டம் எழுந்தது என்பதை **மனத்திலிருத்தி**,

தமிழ்களின் அரசியல், ஆயுதப் போராட்டங்களும் அதன் பயனாக உருவாகிய தமிழீழ நடைமுறை அரசும், தமிழ் மக்களின் அரசியல் வேணவாவை வெளிப்படுத்துவதற்கான அரசியல் வெளியைத் தோற்றுவித்தன என்பதை **மனத்திலிருத்தி,**

பிரித்தானியாவின் காலனி ஆதிக்கத்திலும் சிறிலங்காவின் ஆட்சியிலும் இழந்த தமிழர் இறைமையை 1983 – 2009 இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழர்களால் ஓரளவுக்கு மீட்கப்பட்டுத் தனியரசாக நிர்வகிக்கப்பட்டதையும் **கருத்திற்கொண்டு,**

2002இல் நோர்வே ஊடாக ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை சிறிலங்கா அரசு ஒரு தலைச்சார்பாக முறித்துக்கொண்டதை **கருத்திற்கொண்டு,**

சிறிலங்கா அரசின் இனப்படுகொலைகளும் அரச பயங்கரவாதமும் தமிழர்களின் திறனை வலுக்குன்றச் செய்து, அவர்கள் அனுபவித்து வந்த அரசியல் வெளியை அழித்துவிடுகின்றன என்பதை **கவனத்திற்கொண்டு,**

இலங்கைத் தீவிற்குள் தமிழீழ மக்களின் அரசியல் நாட்டங்களைத் தெளிந்துரைக்க அரசியல் வெளி இல்லாமற் போனதைக் **கவனத்திற்கொண்டு,**

சிறிலங்காவிற்கு வெளியே இந்த அரசியல் வெளியைத் தோற்றுவிக்க புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துக்குள்ள வரலாற்றுக் கடமையை **உணர்ந்து,**

1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தரப்பட்ட கட்டளையை நோர்வே, கனடா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, இத்தாலி, பிரித்தானியா, டென்மார்க், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்ற பொதுசன வாக்கெடுப்புகள் மறுவுறுதி செய்திருப்பதையும், 1976ற்கு பிறகான 30 ஆண்டு காலத்தில் தமிழீழ மக்கள் செய்துள்ள ஈகத்தையும் **கவனத்திற்கொண்டு,**

கடந்த 2010 மார்ச்சு 15இல் வெளியிடப்பட்ட நா.க.த.அரசாங்கத்தின் அறிவுரைக்குழு அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டவாறு தமிழீழ மக்களின் நாடுகடந்த இயல்பும், நாடுகடந்த அரசியல் செயல் முனைப்பும் மலர்ந்திருப்பதைக் **கவனத்திற்கொண்டு,**

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்சு, டென்மார்க், நோர்வே, சுவீடன், பிரித்தானியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற நா.க.த.அரசாங்கத்திற்கான சனநாயக முறைத் தேர்தல்களைக் **கவனத்திற்கொண்டு,**

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள பிலடெல்பியாவில் தேசிய அரசமைப்பு மையத்தில் 2010 மே 17ஆம் நாள் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அமைக்கப் பெற்றதைக் **கவனத்திற்கொண்டு,**

சர்வதேச அங்கீகாரத்துடன் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை ஈடேறச் செய்வதற்காகவும், அவர்களின் இறைமையைச் செலுத்துவதற்காகவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது **ஆகையால்,**

தமிழீழ மக்களின் தேசியக் கொடியையும், தேசிய அடையாளங்களையும், தேசிய சின்னங்களையும், தேசிய நிறங்களையும் பிற தேசிய ஓர்மைகளையும் தொடர்ந்து **பேணிப் பாதுகாக்க வேண்டும் ஆகையால்,**

அமைதி, வன்முறை தவிர்ப்பு (அகிம்சை), சகிப்புத் தன்மை, பல்மத, பல்லின சமூகக் கொள்கை, வெளிப்படைத் தன்மை, பொறுப்பாண்மை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் சுதந்திரத் தமிழீழ அரசு அமைக்கும் பொருட்டு நா.க.த.அ. தம்மை ஒரு சனநாயக ஆட்சியமைப்பின் ஊடாக வழி நடத்தியுள்ளது **ஆகையால்,**

குறிப்பாகச் சொன்னால், ஈழத் தமிழர்களின் பொதுவான இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவும், ஈழத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வாழும் தமிழர்களின் தோழமையை வலுவாக்கவும் முயற்சிகள் செய்ய வேண்டும் **ஆகையால்,**

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாம் அரசவை இந்த அரசமைப்பைத் தனது அடிப்படை வழிகாட்டியாக இதன்வழிப் பிரகடனப்படுத்தி சட்டமாக்கிக் கொள்கிறது **ஆகையால்,**

இந்த அரசமைப்பு செப்டெம்பர் 29, 2010 தொடக்கம் ஒக்டோபர் 01, 2010 வரை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசமைப்புப் பேரவையில் தனதேற்புச் செய்யப்பட்டது.

# அத்தியாயம் - I

## 1.1 நோக்கங்களும் குறிக்கோள்களும்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கதின் நோக்கங்களும் குறிக்கோள்களும் பின்வருமாறு அமையும்.

1.1.1 புலம் பெயர் தமிழ் மக்களால் சனநாயக முறையில் தமது அரசியல் குரலாக தெரிவு செய்யப்பட்ட நா.க.த.அரசாங்கமானது சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ அரசை மீளவும் நிறுவப் பாடுபடும்.

1.1.2 நா.க.த.அ. எப்போதும் மானிட உயிருக்கும் சுய கண்ணியத்துக்குமான தனி மனித உரிமையை போற்றி பாதுகாப்பதுடன், பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாடு மற்றும் பாதுகாப்புக் குறித்தும் கவனத்தில் கொள்ளும்.

1.1.3 நா.க.த.அ. ஆனது தாயகத்திலுள்ள மக்கள், புலம்பெயர் ஈழத்தமிழ்ச் சமூகம், குடிபெயர்ந்து இப்போது உலகின் பிற பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழர்களைக் கொண்டமைந்த உலகத் தமிழ்ச் சமுதாயம் ஆகிய அனைவரின் நலனையும் மேம்படுத்த முற்படும்.

1.1.4 நா.க.த.அ. ஆனது புலம்பெயர் நாடுகளில் ஈழத் தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்பைப் பேணிக் காக்கவும் மேம்படுத்தவும், புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திற்குள்ளும் உலகத் தமிழ்ச் சமுதாயத்திற்குள்ளும் நிலவுகிற ஏனைய தமிழ்ப் பண்பாடுகளுடன் அதன் பிணைப்புகளை நிலைநிறுத்தவும் முற்படும்.

1.1.5 நா.க.த.அ ஆனது தாயகத்தில் கல்விச் செயற்பாடுகள் சிறக்கப் பாடுபடும். அத்துடன் புலம் பெயர் நாடுகளில் தமிழ்மொழிக் கல்வியினை ஊக்குவிக்கவும் பாடுபடும்.

1.1.6 நா.க.த.அ. தாயகத்தில் மேற்கொள்ளப்படும் தொழிலியல், உயர் தொழில்நுட்பவியல் மற்றும் சேவைத்துறை சார்ந்த ஆக்கங்களுக்கான வணிக வாய்ப்புகளைப் புலம்பெயர் நாடுகளில் உறுதி செய்வதன் வாயிலாகத் தாயகத்தின் பொருளியல் நலனை மேம்படுத்த முற்படும்.

1.1.7 நா.க.த.அ. ஆனது தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையும், இன அழிப்பு, இனசுத்தீகரிப்பு, மானுட விரோதக் குற்றங்களையும், போர்க் குற்றங்களையும் புரிந்தவர்கள் மீது குற்ற வழக்குத் தொடுத்து, பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதை உறுதி செய்யும்.

1.1.8 நா.க.த.அ. ஆனது தமிழர் வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் பாலின சமத்துவமாகிய அடிப்படை மனித உரிமையைக் காத்து வளர்த்திடும்.

1.1.9 நா.க.த.அ. ஆனது மாவீரர் குடும்பத்தினர், முன்னாள் போராளிகள், போரினால் பாதிப்புற்ற குடும்பத்தினர் ஆகியோரின் நல்வாழ்வைப் பேணிப்பாதுகாக்கும்.

1.1.10 நா.க.த.அ. ஆனது தமிழ் ஈழம் வெற்றிகரமாக இயங்க வேண்டிய விடயங்களில் கவனம் செலுத்தும்.

1.1.11 நா.க.த.அ. ஆனது மற்றைய நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தும்.

## 1.2 அரசகருமமொழி

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மொழிக் கொள்கை பின்வருமாறு அமையும்.

1.2.1 தமிழ்மொழியே நா.க.த.அரசாங்கத்தின் அரசகரும மொழியாக இருக்கும். இணைப்பு மொழியாக தேவையேற்படும் பட்சத்தில் வேற்று மொழிகளையும் பயன்படுத்தலாம்.

1.2.2 அனைத்து நா.க.த.அ ஆவணங்களும் தமிழில் இருத்தல் வேண்டும். தேவைப்படும் இடத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருத்தல் வேண்டும்.

1.2.3 ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டு மொழியைப் பயன்படுத்தலாம்.

## 1.3 நா.க.த.அரசாங்கத்தின் கட்டமைப்பு

நா.க.த.அ. ஓர் அரசவையையும், ஓர் அமைச்சரவையையும், ஓர் மேலவையையும் கொண்டிருக்கும்.

### 1.3.1 அமைச்சரவை

அமைச்சரவை பின்வரும் கடமைகளை நிறைவேற்றும்.

அ. நாடுகடந்த தமிழீழ அரசாங்க அமைச்சரவையானது பிரதம அமைச்சர் ஒருவரையும் பிரதமரால் நியமிக்கப்பட்ட ஒரு துணைப்பிரதமரையும் அவரால் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை கொண்ட அவரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் கொண்டிருக்கும்.

ஆ) நா.க.த.அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரம் அமைச்சரவையிடம் இருக்கும், இந்த அரசமைப்பின் வழிவகைகளுக்கிணங்க நேரடியாகவோ, அதன் ஆணைக்குட்பட்ட அலுவலா்கள் வாயிலாகவோ, அது இந்த அதிகாரத்தைச் செலுத்தும். குறிப்பாகச் சொன்னால், அமைச்சரவை பின்வரும் நிறைவேற்று அதிகாரங்களைச் செயல்படுத்த அதிகாரம் அளிக்கப்படும்.

(1) சட்டமியற்றும் அரசவையால் குறித்துரைக்கப்பட்ட சட்ட முன்வடிவுகளுக்கும் விதிமுறைகளுக்கும் இசைவளித்து அவற்றைப் பிறப்பித்தல்,

(2) சட்டங்களையும், சட்ட வலிமை கொண்ட அவசரச் சட்டங்களையும் பிறப்பித்தல்,

(3) மதிப்பியல் விருதுகளையும், பதவி நியமனங்களையும் வழங்குதல்,

(4) தேவை ஏற்படின் அரசவையைக் கூட்டுதல்,

(5) தேவைப்படும் போதெல்லாம் அரசவைக்குச் செய்திகளும் உரைகளும் அனுப்புதல்,

(6) அரசவைக் கூட்டங்களில் இயற்றப்படும் தீர்மானங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொறுப்பு முற்றுமுழுதாக அமைச்சரவையையே சாரும்.

(7) அமைச்சரவையில் இரகசியத்தன்மை பேணப்படவேண்டும் என்பதனால், அமைச்சரவை உறுப்பினர்கள் அமைச்சரவையில் மட்டுமே தங்களுக்குள் விவாதிக்கவோ, கேள்விகளை எழுப்பவோ முடியும்.

(8) அமைச்சரவை கூட்டுப்பொறுப்புடன் செயல்படவேண்டும். அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும், அமைச்சரவையால் எடுக்கப்படும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் தனித்தும் ஒருமித்தும் பொறுப்புடையவர்களாவர்.

### 1.3.2 அமைச்சரவைத் தெரிவு

அமைச்சரவைத் தெரிவு பின்வரும் முறையில் நடைபெறும்:

(அ) பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்ட அவை உறுப்பினர்களிடமிருந்து இரகசிய வாக்கெடுப்பு மூலம் சாதாரண பெரும்பான்மையால் அமர்வில் பங்கேற்பவர்களினால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஆ) பிரதமர் அரசவை உறுப்பினர்களிலிருந்து துணைப்பிரதமரையும் அமைச்சர்களையும் துணை அமைச்சர்களையும் நியமிப்பார்.

இ). பிரதமர் அந்தந்த அமைச்சர்களின் ஆலோசனையோடு அந்தந்த அமைச்சுகளுக்கான துணை அமைச்சரை நியமிப்பார்.துணை அமைச்சர் நியமனம் பற்றிய தமது ஆலோசனையை அமைச்சர் 30 நாட்களுக்குள் வழங்காவிடின் பிரதமர் தமது முடிவை எடுக்கலாம்.

ஈ). துணைப்பிரதமர் மற்றும் அமைச்சர்களின் கடமைகள் பொறுப்புகளை பிரதமர் வகுத்துக் கொடுப்பாரஇ. துணை அமைச்சர்களின் கடமைகள் பொறுப்புகளை அந்தந்த அமைச்சர்கள் தீர்மானிப்பார் துணை அமைச்சர்களுக்கு அமைச்சர்களின் உரிமைகள் (வாக்களிப்பு உட்பட) இருக்காது. ஆனால் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கு பற்றலாம்.அமைச்சர் சமுகமளிக்காவிடில் தன் அமைச்சருக்குப் பதிலாக அக் கூட்டத்தில் துணை அமைச்சர் அமைச்சரின் உரிமையைப் பயன்படுத்தலாம்.

### 1.3.3 அமைச்சர்களுக்கான தகுதிகள்

அமைச்சர்களுக்கான தகுதிகள் பின்வருமாறு:

அ) 2010 மார்ச் 15ஆம் நாள் வெளியிடப்பட்ட மதியுரைக்குழு அறிக்கையில் தரப்பட்டுள்ள வரையறையின்படி தமிழீழத்தின் குடிமகனாக/குடிமகளாக இருத்தல் வேண்டும். அல்லது ஈழத் தமிழர் பண்பாட்டு வாழ்வோடு பூர்வீகம், திருமணம், தத்தெடுத்தல் ஆகியனவற்றில் ஏதாவது ஒன்றினூடாக இணைவு கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) நொடிப்புநிலை அடையாதவராயும் (கடன் அடைக்க முடியா நிலை) எந்த நீதிமன்றத்தாலும் சுயலாப அல்லது சுயநோக்கச் செயல்பாடுகளுக்கான அல்லது சட்டவிரோத குற்றத்திற்காக அவர் வாழும் நாட்டிலோ அல்லது வேறு ஒரு நாட்டிலோ சட்டங்களின்படி தண்டிக்கப்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

இ) தகுதியற்றவர் என்று அரசவையால் அறிவிக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

ஈ) அமைச்சரவையால் முன்னர் அமைச்சர் பொறுப்பிலிருந்து அகற்றப்படாதவராய் இருத்தல் வேண்டும்.

உ) ஈழத்தமிழ் மக்களின் நலனுக்குக் கேடான வேறெந்த நாடுகளிலிருந்தும், சேவை, தகுநிலை, பொருளியல் நன்மை அடையாதவராய் இருத்தல் வேண்டும்.

ஊ) அமைச்சரவை உறுப்பினா் ஒருவா் இறந்தாலோ அல்லது மாற்றீடு செய்யப்பட்டாலோ அல்லது பதவி விலகினாலோ அவருக்கான மாற்றீடு பிரதமரால் மூன்று மாத காலத்திற்குள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

எ) இவ்வாறு நியமிக்கப்படும் அமைச்சர் முந்தைய அமைச்சரவை உறுப்பினரின் மிகுதியான பதவிக்காலத்தை நிறைவு செய்வார்.

### 1.3.4 பிரதமரின் பதவிக்காலம்

இந்த அரசமைப்புக்கு இணங்கவும் பதவி நீக்கம் செய்யப்படும் சந்தர்ப்பம் இல்லாதபோது பிரதமர் நடப்பாண்டு அவையின் காலம் வரை சேவை செய்வார். பிரதமராகப் பணி புரிபவர் சுகவீனம் காரணமாக தனது சேவையை தொடரமுடியாமல் போனாலோ அல்லது இராஜினாமா செய்தாலோ அல்லது தகுதி நீக்கப்பட்டாலோ தெரிவு செய்யப்படும் புதிய பிரதமர் அவையின் மிகுதிக் காலத்திற்கு பணி புரிவார்.

### 1.3.5 பதிலிப் பிரதமர் நியமனம்

அ) பிரதமர் எந்த சந்தர்ப்பத்திலும் தம்மால் செயற்பட முடியாத நிலையில் துணைப் பிரதமரை பதிலிப் பிரதமராக அமர்த்துவார்.

ஆ) அவ்வாறு பிரதமரால் பதிலிப் பிரதமரை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டு பிரதமர் பதவி வெற்றிடமாக இருக்கும் நிலையில் துணைப்பிரதமர் அப்பதவியை நிரப்புவார். துணைப்பிரதமரும் பதவியை நிர்ப்பமுடியாமல் போனாலோ அல்லது நிரப்பாமல் விட்டாலோ அரசவை பதிலிப் பிரதமரை பிரிவு 1.3.2(அ) இன் படி சாதாரண பெரும்பான்மையுடன் அவையின் மீதிக்காலத்திற்கு தெரிவு செய்யும்.

### 1.3.6 அமைச்சரவையின் பதவிக்காலம்

அ) அமைச்சரவை கலைக்கப்படுதல் அல்லது அமைச்சர்களின் பதவிக் காலம் முடிவதற்கு முன்பே நீக்கப்படுதல் போன்ற வேறு வகையில் குறித்துரைக்கப் படாவிட்டால், அமைச்சரவையின் பதவிக் காலம் ஐந்து (5) ஆண்டுகளாக இருக்கும்.

ஆ) குறித்துரைக்கப்பட்டவாறு அமைச்சரவை கலைக்கப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர அமைச்சர் எவரும் மீண்டும் தெரிவு செய்யப்படுவது செல்லுபடியற்றுப் போகாது.

### 1.3.7 அமைச்சரவைக் கூட்டம்

தேவைப்படும் போதெல்லாம் அமைச்சரவைக்கூட்டம் நடத்த பிரதமர் அழைப்பு விடுக்கலாம். பிரதமர் இக்கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். அவரில்லாத போது துணைப் பிரதமர் தலைமை வகிப்பார்.

### 1.3.8 அமைச்சரவையின் கடமைப் பொறுப்புகள், அமைச்சர்கள் நீக்கம்

அ). பிரதமர், துணைப் பிரதமர், அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் அனைவரும் அரசவை தலைவர் அல்லது துணை அரசவை தலைவர் முன்னிலையில் பதவி ஏற்பு மற்றும் இரகசிய காப்பு உறுதி ஏற்று ஒப்பமிடுவார்கள்.

ஆ) அமைச்சரவையானது அதன் உறுப்பினர்கள் தம் கடமைகளைச் செய்வதற்குக் கூட்டுப் பொறுப்புடையதாகும். பொதுவாக அரசவைக்கு அது விளக்கமளிக்கவும், விடை சொல்லவும் பொறுப்புடையதாகும். அமைச்சரவையானது அறுதிப் பெரும்பான்மையுடன் தீர்மானங்கள் இயற்றலாம்.

இ) பிரதமர் அமைச்சர்களுக்கான துறைகளை ஒதுக்கீடு செய்வார்.

ஈ) அரசவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேற்பட்ட பெரும்பான்மையினரின் ஒப்புதலுடன், அமைச்சரவை முழுவதையும் பிரதமர் கலைக்கலாம். அமைச்சர் அல்லது அமைச்சர்கள் அல்லது துணைப் பிரதமரையும் பிரதமர் பதவி நீக்கம் செய்யலாம்.

உ) அமைச்சரவை முழுவதும் இவ்வாறு கலைக்கப்படுமானால் கலைக்கப்பட்ட நாளிலிருந்து அறுபதிற்கு(60) மேற்படாத நாட்களில் புதிய அமைச்சரவை தெரிவு செய்யப்பட வேண்டும்.

ஊ) அமைச்சரவையின் பதவிக் காலம் முடிந்த பிறகும் கூட, புதிய அமைச்சரவை பதவியேற்கும் வரை அதே அமைச்சரவை தொடர்ந்து பதவியில் இருக்கும். இந்த உறுப்பின் (ஈ) (உ) கூறுகளில் குறித்துரைக்கப்பட்டவாறு குறிப்பிட்ட அமைச்சரவை உறுப்பினர் பதவி நீக்கம் செய்யப்படுவாராயின் அதன்பின் பதவியில் இருக்க மாட்டார். அமைச்சரவை முழுவதும் கலைக்கப்படுமானால், புதிதாகத் தெரிவு செய்யப்படும் அமைச்சரவை பதவியேற்கும் வரை அதே அமைச்சரவை தொடர்ந்து செயற்படும். ஆனால் கொள்கைப் பொருட்பாடுகள் தொடர்பாக அவர்கள் புதிய முடிவுகள் ஏதும் எடுக்கக் கூடாது.

## 1.4 அரசவை

அரசவை என்பது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டதாய் இருக்கும்.

### 1.4.1 அரசவையின் இயைபு

அரசவையானது, ஆலோசனைக் குழுவினது ஆய்வின் அடிப்படையில் பிரிக்கப்பட்டதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். எவ்வாறாயினும் தமிழ் புலம்பெயர்ந்தோர் வசிக்கும் அனைத்து நாடுகளிலும், பிராந்தியங்களிலும் போட்டியிட ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதற்கான அடிப்படையை தேர்தல்

ஆணையம் தீர்மானிக்கும். மொத்த உறுப்பினர்கள் அந்த தவணைக்கான அரசவையை உருவாக்குவார்கள், மேலும் வாக்களிப்பு மற்றும் பிற அனைத்து சிறப்பு உரிமைகளும் இவர்களுக்கு இருக்கும்.

### 1.4.2 சட்டமியற்றும் அதிகாரம்

சட்டமியற்றும் அதிகாரம், ஆணையுரிமை அனைத்தும் அரசவையிடம் தங்கி நிற்கும் இவ்வாறு இயற்றப்படுவது சட்டமாக வேண்டுமானால் பிரதமரின் இசைவு தேவைப்படும். பிரதமர் இசைவளிக்காமல் விட்டால் அரசவையில் விவாதிக்கப்பட்டு தேவையான மாற்றங்களுடன் அரசவையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் சட்டமாக்கப்படும்.

### 1.4.3 அரசவை உறுப்பினருக்கான தகுதிகள்

அரசவை உறுப்பினராவதற்குப் பின்வரும் தகுதிகள் தேவைப்படும்:

அ) 2010 மார்ச் 15ஆம் நாள் வெளியிடப்பட்ட மதியுரைக்குழு அறிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழீழக் குடிமகனாக/குடிமகளாக இருத்தல் வேண்டும். அல்லது ஈழத் தமிழர் பண்பாட்டு வாழ்வோடு பூர்வீகம், திருமணம், தத்தெடுத்தல் ஆகியனவற்றில் ஏதாவது ஒன்றினூடாக இணைவு கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) 17 வயது நிறைவடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

இ) நொடிப்புநிலை அடையாதவராயும் (கடன் அடைக்க முடியா நிலை) எந்த நீதிமன்றத்தாலும் சுயலாப அல்லது சுயநோக்கச் செயல்பாடுகளுக்கான அல்லது சட்டவிரோத குற்றத்திற்காக அவர் வாழும் நாட்டிலோ அல்லது வேறு ஒரு நாட்டிலோ சட்டங்களின்படி தண்டிக்கப்படாதவராயும் இருத்தல் வேண்டும் அல்லது அவரது வழக்கில் குற்றத் தண்டனை குற்றத் தீர்ப்புகளின் பதிவில் இருந்து அகற்றப்பட்டிருக்க வேண்டும்.

ஈ) தமிழீழ மக்களின் நலனுக்குக் கேடான பிற நாடுகளிலிருந்து சேவை, தகுநிலை அல்லது பொருளியல் நன்மை அடையாதவராய் இருத்தல் வேண்டும்.

உ) அரசமைப்பில் கூறப்பட்டுள்ளவாறு நா.க.த. அரசாங்கத்தின் நோக்கங்களையும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் செயல்முறைகள் ஆகியவற்றையும் ஏற்றுக் கொள்கின்றவராய் இருப்பதுடன் முன்னர் அரசவையால் தகுதி நீக்கம் செய்யப்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

### 1.4.4 அரசவையின் பதவிக் காலம்

அரசவையின் பதவிக்காலம் அதன் முதலாவது அமர்வில் இருந்து ஐந்து 5 ஆண்டுகள் ஆகும். முதலாவது அரசவையின் பதவிக்காலம் அரசமைப்பு (விதிகள்) தனதேற்புச் செய்யப்பட்ட பின் வந்த முதலாவது அமர்வில் இருந்து மூன்று வருடம் ஆகும்.

### 1.4.5 அரசவையின் அமர்வுகள்

அரசவைத் தலைவர் தாமாகவே அல்லது பெரும்பான்மையான அரசவை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அரசவையின் கூட்டத்துக்கு நேரம், இடம், காலஅளவு குறித்து அழைப்பு விடுப்பார்.

### 1.4.6 அரசவையில் வாக்களித்தல்

இந்த அரசமைப்பின் உறுப்புகளிலும் பிற வழிவகைகளிலும் வழிசெய்யப்பட்டுள்ளவை தவிர, அரசவையின் பிற பணிகள் யாவும் அரசவைக்கு வருகை தந்தோரின் சாதரண பெரும்பான்மை வாக்கினால் தீர்வு செய்யப்படும். பணிப் பொருட்பாடுகள் தொடர்பாக வாக்குகளில் சரிசம நிலை ஏற்படுமானால், அரசவைத் தலைவர் தம் விருப்புரிமையின் பேரில் முடிவெடுக்கும் வாக்கு அளிப்பதன் மூலம் அப்பொருட்பாட்டுக்குத் தீர்வு காணலாம்.

### 1.4.7 அரசவையின் நிறைவெண்

அரசவை உறுப்பினா்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினா் வருகை தந்திருந்தால், எந்தப் பொருட்பாடு குறித்தும் தீர்வு காண அதற்கு உரிமை உண்டு.

### 1.4.8 அரசவையின் நடைமுறை விதிகள்

அரசவை இந்த அரசமைப்பின் வழிவகைகளுக்கு இணங்க அரசவைக்கு வருகை தந்திருந்த உறுப்பினா்களில் மூன்றில் இரு பங்குக்கு மேற்பட்டவா்களின் ஒப்புதலோடு நடைமுறை விதிகளையும் கூட்ட வழிமுறையையும் வகுத்துக்கொள்ளும். இவ்வாறான விதிகள் அது முதல் செயலுக்கு வரும்.

### 1.4.9 அவசரச் சட்டங்கள் பிறப்பித்தல்

அ) அரசவையினால் இயற்றப்பட்டு பிரதமருக்கு அனுப்பப்படும் சட்டமுன்வடிவு அல்லது முன்மொழிவு எதுவாயினும் அவா் அதற்கு இசைவளித்த உடனே சட்டமாகக் கருதப்படும். இவ்வாறான சட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதா என்பதை பிரதமர் 14 வேலை-நாட்களுக்குள் முடிவு செய்ய வேண்டும், அல்லது அவா் தக்கவை எனக் கருதப்படும் பரிந்துரைகளோடு முன்மொழிவை அக்காலத்திற்குள் அரசவைத் தலைவருக்குத் திருப்பி அனுப்பலாம். அதன் பிறகு, நா.க.த.அ. அரசவை முன்மொழிவுக்கான பிரதமர் பரிந்துரைகள் மீது கலந்தாய்வு செய்து, அடுத்த 14 வேலை-நாட்களுக்குள் மறுஒப்புதலுக்காகப் பிரதமருக்கு அதை அளித்திடும்.

ஆ) அரசவை அமா்வில் இல்லாத நேரத்தில் பெருமுக்கியத்துவம் வாய்ந்த சிக்கலேதும் எழுந்து அரசவையைக் கூட்ட வேண்டிய அவசரத் தேவை எழுமானால், பிரதமர், அமைச்சரவை உறுப்பினா்களின் பெரும்பான்மையுடன் இணங்கிப்போய் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கலாம். இவற்றுக்குச் சட்டத்திற்குரிய அதே வலிமை இருக்கும்.

இ) மேற்குறித்தவாறு பிறப்பிக்கப்படும் அவசரச் சட்டங்கள் எதையும் அரசவைத் தலைவர் ஊடாக அரசவைக்கு மூன்று வேலை-நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அரசவை உறுப்பினர்கள் அடுத்து வரும் அமர்வில் கலந்தாய்வு செய்து அவற்றைத் திருத்தவோ, மாற்றவோ, நீக்கவோ செய்யலாம்.

### 1.4.10 சிறப்புப் பொது அரசவை

அ) அமைச்சரவை, அரசவைத் தலைவா், துணைத் அரசவைத்தலைவா் ஆகியோரின் கூட்டு முன்மொழிவின் பேரில் சிறப்புப் பொது அரசவையைக் கூட்டலாம்.

ஆ) இப்படி ஒரு கூட்டத்திற்கான பிரதிநிதிகளின் இயைபில் அரசவையின் உறுப்பினா்கள் இடம்பெறுவர். அமைச்சரவை அரசவையுடன கலந்தாலோசித்து, அந்த அமர்விற்கான திட்டம், காலம் மற்றும் இடத்தைக் கூட்டாக முடிவு செய்யும்.

இ) கூட்டத்தின் திட்டப் பொருள், காலம், இடம் ஆகியவை முடிவு செய்யப்பட்ட பின்னர் அரசவைத்தலைவா் இக்கூட்டத்திற்குரிய அறிவித்தலை 15 நாட்களுக்குள் வெளியிட வேண்டும்.

## 1.5 அரசவை உறுப்பினர்கள்

அரசவை உறுப்பினர்களின் உரிமைகள் பின்வருமாறு அமையும்.

### 1.5.1 அரசவை உறுப்பினர்களின் உரிமை

அ) அரசவையின் அமர்வுகளில் விவாதத்திலும் கருத்தாடலிலும் பங்கேற்பதற்கும், பரிந்துரை அல்லது விளக்கமேதும் அளிப்பதற்கும், வாக்களிப்பதற்கும் உறுப்பினர்கள் உரிமை பெற்றவராவர்.

ஆ) அரசவையில் தீர்மானமாக நிவேற்றிக்கொள்வதற்கான வாக்கெடுப்புக்கு விடப்படும் எந்தவொரு முன்மொழிவும், அரசவையில் அது தொடர்பான
நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவதற்கு குறைந்தது ஆறு வாரங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட அந்த முன்மொழிவு, அவைத் தலைவரால் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்துமூலமாக அறிவிக்கப்படும்.
அவசரநிலை ஏற்பட்டால், அவைத்தலைவரின் விருப்பப்படி அறிவிப்பு காலம் குறைக்கப்படலாம்.

### 1.5.2 அரசவை உறுப்பினர்கள் பதவியேற்பு அல்லது உறுதி எடுத்தல்

அ) அரசவை உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது முதல்முறை அரசவைக்கு சமூகமளித்து இருக்கையில் அமர்வதற்கு முன் அரசவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரின் முன்நிலையில் அல்லது அவர் சார்பில் அமர்த்தப்படுகின்ற ஒருவரின் முன், சட்டம் குறித்துரைத்துள்ள படிவத்தில் பதவியேற்பும், உறுதிமொழி எடுப்பும் மேற்கொண்டு ஒப்பமிடுவார்.

(ஆ) அரசவைக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர் ஒருவர் பொருத்தமான உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டு, உறுதிமொழி எடுத்துக் கொள்ளாதவரை, அவர் சபையின் எந்தவொரு நடவடிக்கைகளிலும் பங்குபற்ற முடியாது. அத்துடன் அவர் புதிய அரசவையின் 1 வது அமர்விலிருந்து 6 வார காலத்துக்குள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளாதவிடத்து, குறிப்பிட்ட உறுப்பினர் தாமாகவே தனது உறுப்புரிமையை விலக்கிக் கொண்டுள்ளார் அல்லது பதவியை இழந்துவிட்டார் என்று கருதப்படும்.

சில விதிவிலக்கான சூழ்நிலைகளில், அவைத்தலைவர் தனிப்பட்ட நேர்வுகளை முடிவு செய்யலாம்.

### 1.5.3 சட்டமுன்வடிவுகள் அறிமுகமும் இயற்றலும்

அரசவை உறுப்பினர் எவரும் அரசவை விதிகளில் குறித்துரைத்துள்ளபடி சட்ட முன்வடிவு அல்லது தீர்மானம் ஏதும் அறிமுகம் செய்வதற்கும், திருத்தம் ஏதும் முன்மொழிவதற்கும் உரிமை உடையவராவார்.

### 1.5.4 அரசவையின் உறுப்பினர் உறுப்புரிமை நீக்கம்

அ. அரசவையில் இணைந்தபின் அங்கத்தவர் ஒருவரின் நடத்தை அரசவையின் நியமங்களுக்கு எதிரானதாகவோ அன்றி நா.க.அ. இற்கு அவப்பெயரை ஏற்படுத்துமாறோ இருக்குமாயின் இதுபற்றி பொதுமக்களோ அல்லது அங்கத்தவர் யாரேனும் அவைத்தலைவரின் கவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கலாம்.

ஆ. அவைத்தலைவர் இந்த முறைப்பாட்டை அவையில் கலந்துரையாடலுக்கு எடுக்கவோஇ எடுக்காமல் விடவோஇ சம்பந்தப்பட்ட அங்கத்தவரை இரண்டு அவை அமர்வுகளுக்கு வராமல் தடுக்கவோஇ நெறிமுறை ஆணையகத்திற்கோ அல்லது அரசவைக்கோ ஒழுங்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்க முடியும்.

இ. அவைத்தலைவர் இந்த முறைப்பாட்டை நெறிமுறை ஆணையத்திற்கு அறிவித்து 30 நாட்களுக்குள் தீர்வு கிடைக்காவிடில் விடயத்தை அவைக்கு கொண்டுவரலாம்.

ஈ. நெறிமுறை ஆணையத்தின் தீர்ப்பை அவையில் பிரசன்னமானோரில் 2/3 பெரும்பாண்மையோர் ஆதரித்தால் அந்த தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படும். இல்லாவிடில் தீர்வு நிராகரிக்கப்பட்டதாக கொள்ளப்படும். இந்தமுடிவை அவைத்தலைவர் சம்பந்தப்பட்டவருக்கு அறிவிப்பார்.

உ. அவையின் அல்லது நெறிமுறை ஆணையத்தின் தீர்ப்பு பின்வருவனவற்றுக்கு குறையாமல் இருக்கும்

1 . சம்பந்தப்பட்டவர் எழுத்து மூலம் மன்னிப்பு கோரி எல்லா அங்கத்தவர்களுக்கும் அனுப்புதல்

2 . அடுத்து வரும் இரண்டு அவை அமர்வுகளுக்கு வராமல் தடுத்தல்

3 . எல்லா பொறுப்புகளிலிருந்தும் நீக்குதல்

4 . நா.க.அ. இலிருந்து நீக்குதல்

**1.6 நீக்கப்பட்டுள்ளது**

**1.7 அரசவையின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தெரிவு முறை**
அரசவையின் தலைவரும் துணைத் தலைவரும் பின்வரும் முறையால் தெரிவு செய்யப்படுவார்கள்:

1.7.1 அரசவை ஒவ்வொன்றினதும் முதல் அமர்வின் தொடக்கத்தில் உறுப்பினர்கள் அரசவைத் தலைவர் ஒருவரையும் துணைத் தலைவர் ஒருவரையும் அரசவையில் சமூகமளித்தோரில் சாதாரண பெரும்பான்மையுடன் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்வார்கள்.

1.7.2 அரசவைத் தலைவரும், துணைத் தலைவரும் தெரிவுசெய்யப்பட்ட பின், தத்தமது பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின் அவை உறுப்பினர்களுள் மூத்தோராக அடையாளம் காணப்பட்டவர் முன்னிலையில் சட்டம் குறித்துரைத்துள்ள வடிவத்தில் அரசவைத் தலைவர் விசுவாச உறுதி எடுத்துப் பதவியேற்பார். துணைத்தலைவர் அரசவைத் தலைவர் முன்னிலையில் சட்டம் குறித்துரைத்துள்ள வடிவத்தில் விசுவாச உறுதி எடுத்துப் பதவியேற்பார்.

1.7.3 இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் அரசவைத் தலைவர் அல்லது துணைத் தலைவர் அரசவையில் சமூகமளித்தோரில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரால் நீக்கம் செய்யப்பட்டால், அவர் இவ்வாறு தீர்மானம் இயற்றப்பட்ட நாளிலிருந்து பதவியை விட்டகல்வார்.

1.7.4 அரசவையானது அரசவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரை நீக்குவது தொடர்பான ஒரு பொருட்பாடு குறித்துக் கூடி விவாதித்துக் கொண்டிருக்கையில் அவர் அத்தகைய அமர்விற்குத் தலைமை வகிக்க மாட்டார்.

1.7.5 அரசவைத் தலைவர் அல்லது துணைத் தலைவர் இருக்கையானது அவரது நீக்கம், இறப்பு, அல்லது வேறு காரணத்தால் வெற்றிடமாகுமானால், அறுபது நாட்களுக்குள் அவருக்கான மாற்றீடு தெரிவுசெய்யப்படுவார்.

**1.8 மேலவை தெரிவு**
மேலவையானது பல்வேறு துறைகளையும் சேர்ந்த வல்லுனர்களைக் கொண்டதாய் இருக்கும்.

1.8.1 மேலவை ஆகக்குறைந்தது 10 உறுப்பினர்களை அல்லது புதிய அவையின் ஆரம்ப அமர்வில் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களைக் கொண்டதாய் இருக்கும்.

1.8.2 மேலவை உறுப்பினர்கள் அரசவையின் பரிந்துரைப் பட்டியலில் இடம்பெறுவோரில் இருந்து பிரதமரால் நியமனம் செய்யப்படுவார்கள். சட்டமுன்வடிவு அல்லது வேறுவகைச் சட்டம் எதுவும் மேலவையிலிருந்து பிறப்பெடுக்க முடியாது.

1.8.3 அரசவையால் முன்மெழியப்படும் எந்தவொரு சட்டமும் அல்லது பிரதமர் அல்லது அரசவையால் மேற்கொள்ளப்படவிருக்கும் எந்தவெரு நடவடிக்கையையும் கருத்துக் கேட்டறிவதற்காக மேலவைக்கு அனுப்பப்படலாம். மேலவையின் கருத்து அரசவையையோ, பிரதமரையையோ கட்டுப்படுத்தாது.

1.8.4 மேலவையின் பதவிக் காலம் அரசவையின் பதவிக்காலத்தை ஒத்ததாக இருக்கும்.

### 1.9 அரசமைப்புத் திருத்தங்கள்

உறுப்பினர் எவரும் அரசமைப்புக்கான திருத்தங்களை அரசவைத் தலைவர் ஊடாகச் சட்டவாக்கத் தொழில் நுட்பக் குழுவிற்கு முன்வைக்கலாம். சட்டவாக்கத் தொழில் நுட்பக் குழு அத்திருத்தங்களை ஆராய்ந்து தனது பரிந்துரையை அரசவைத் தலைவர் ஊடாக அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கும். அத்துடன் அத்திருத்தங்களை எவ்வளவு விரைவில் விவாதிக்கவேண்டும் என்ற கருத்தையும் தெரிவிக்கும். திருத்தம் முன்வைக்கப்பட்டு தகுந்த காலத்திற்குள் அரசவை கூட்டப்பட்டுத் திருத்தம் தொடர்பாக விவாதம் நடாத்தி வாக்கெடுப்பிற்கு விடவேண்டும். வாக்கெடுப்பின் போது சமூகமளித்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்ட திருத்தங்கள் அரசமைப்பினுள் சேர்த்துக்கொள்ளப்படும். அரசமைப்புத் திருத்தம் என்பதில் சேர்த்தல், நீக்குதல், மாற்றம் செய்தல் ஆகியவை அடங்கும்.

#### 1.9.1 சட்டவாக்கத் தொழில் நுட்பக்குழு உருவாக்கம்

பிரிவு 1.9 இல் குறித்துரைக்கப்பட்ட அரசமைப்பை மீளாய்வு செய்தல் திருத்தங்களை மேற்கொள்ளல் போன்றவற்றை மேற்கொள்ளும் சட்டவாக்கத் தொழில் நுட்பக்குழுவிற்கு மூன்று அரசவை உறுப்பினர்களை அமைச்சரவை நியமனம் செய்யும்.

### 1.10 ஏனைய பிற

#### 1.10.1 உள்நாட்டு அமைப்புகளுடன் உறவு

நா.க.த.அ. கட்டமைப்புக்கள் இந்த அரசமைப்பின் குறிக்கோள்களுக்கு முரணாகாத நோக்கங்கள் கொண்ட உள்நாட்டு அமைப்புகளோடு கூட்டாக வேலை செய்யலாம்.

#### 1.10.2 தேர்தல் ஆணையம்

பிரதமர் நா.க.த.அ. அரசவையின் பரிந்துரை அடிப்படையில் மூன்று உறுப்பினா் கொண்ட தேர்தல் ஆணையத்தை நியமனம் செய்வார். வருங்கால நா.க.த.அ. தேர்தல்களை நடத்துவதற்குத் தேர்தல் ஆணையம் பொறுப்பாகும். தேர்தல் ஆணைய உறுப்பினா்கள் நா.க.த.அ. அரசவையிலோ அல்லது அறிவுரைக் குழுவிலோ அல்லது வேறெந்த நா.க.த.அ. குழுவிலுமோ உறுப்பினர்களாய் இருத்தல் ஆகாது.

#### 1.10.3 மதியுரைக்குழு

நா.க.த.அ. அமைக்கப்படுவதில் மதியுரைக்குழு வகித்த தனித்துவமான முக்கியப் பங்கினைக் கருத்தில் கொண்டு இப்போதைய இயைபுடன் மதியுரைக்குழு நா.க.த.அ. முதல் பதவிக் காலத்தின் போதும் தொடா்ந்து இயங்கிவரும்.

அரசவை, அமைச்சரவை அல்லது பிரதமர் எந்த பொருட்பாடு அல்லது நடவடிக்கை குறித்தும் மதியுரைக்குழுவிடம் ஆலோசனை கேட்கலாம். அரசவை, அமைச்சரவை அல்லது பிரதமருக்கு மதியுரைக்குழு ஆலோசனைகள் வழங்கலாம். ஆனால் மதியுரைக்குழுவின் ஆலோசனைகள் அரசவையையோ, பிரதமரையோ அல்லது அமைச்சரவையையோ கட்டுப்படுத்தாது.

#### 1.10.4 நெறிமுறை ஆணையம்

நா.க.த.அ. அரசவையின் இசைவுடன் அமைச்சரவை நெறிமுறை ஆணையத்தை நியமனம். இவ்வாணையத்தில் மூன்று உறுப்பினர்கள் இடம்பெறுவர்.

# அத்தியாயம் 2

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் திறைசேரி

### 2.1 நிதியமைச்சின் பொறுப்புக்கள்

நிதியமைச்சும் திறைசேரியும் ஒரு அலகாக "நிதி அமைச்சு என்ற பெயரில் செயல்படும்" பின்வருவன நிதியமைச்சின் முக்கியச் செயற்பாடுகள் ஆகும்:

### 2.1.1 நா.க.த.அ. வரவு-செலவுத் திட்டம்

நா.க.த.அ. வரவு-செலவுத் திட்டமானது அரசவையால் இயற்றப்பட்டு, பிரதமரின் ஒப்புதல் பெற வேண்டிய சட்ட ஆவணம் ஆகும். நா.க.த.அ. வரவு-செலவுத் திட்டத்தின் இரு அடிப்படைக் கூறுகள் நா.க.த.அ. வரவினங்களும் நா.க.த.அ. செலவீனங்களும் ஆகும். நா.க.த.அ. வரவினங்களுக்கான பல்வேறு வழிகளையும் உறுதி செய்ய வேண்டும். நா.க.த.அ. செலவினங்களில் நா.க.த.அ. நிர்வாகச் செலவுகள், நா.க.த.அ. துறைவாரி ஒதுக்கீடுகள், நா.க.த.அ. முதலீட்டுச் செலவுகள், நலத்திட்ட கொடுப்புகள் ஆகியவையும் அடங்கும்.

**நிதியாண்டு**

நிதியாண்டானது ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் டிசம்பர் 31 வரையாகும்.

### 2.1.3 நிதியமைச்சர்

நா.க.த.அ. நிதியமைச்சரே பொருளாளரும் ஆவார். இவர் அரசாங்கச் செலவினங்களுக்கும், வருமானத் திரட்டலுக்கும் பொறுப்பானவர் ஆவார். இவர் திறைசேரியின் தலைவராக இருந்து அரசாங்கத்தின் பொருளியல் கொள்கையை வடிப்பதில் முக்கிய பங்கும் வகிப்பார். பொருளாளர் நா.க.த.அ. அரசவை உறுப்பினராக பிரதிநிதிகள் அவையில் இடம்பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் அரசவையின் இறுதி அமர்வில், அடுத்தாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை அரசவையில் சமர்ப்பிக்க வேண்டும்.

### 2.1.4 கொள்கை வகுப்பில் நிதியமைச்சரின் பங்கு

நிதியமைச்சிற்கு உட்பட்ட கொள்கைப் பொருட்பாடுகள் அனைத்துக்கும் நிதியமைச்சர் ஒட்டுமொத்தப் பொறுப்பு வகிக்கிறார். இந்தக் கொள்கைப் பொருட்பாடுகளில் பொருளியியல் கொள்கை, பொருளியியல் வளர்ச்சி, பொருளியல் பொதுநலன், வரி விதிப்பு, பணக் கடன் வாங்குதல், வங்கி முறைமை, செலாவணி, தமிழீழத்தில் அயல் முதலீடு, மக்கள் தொகைக் கணிப்பும் புள்ளிவிவரங்களும், அண்டை நாடுகளுடனான வர்த்தகம் மற்றும் நிதி உறவுகள் ஆகியவை இவற்றில் அடங்கும்.

### 2.1.5 வருடாந்த வரவு-செலவு மதிப்பீடு

அ) நிதியமைச்சர் ஒரு தகவல் அறிக்கையைத் தயாரித்து, அரசவையில் சமர்ப்பிக்க வேண்டும். அதில் துறைவாரியாக பின்வரும் செய்திகளை எடுத்துரைக்க வேண்டும்:

ஆ) அறிக்கைக்குரிய காலத்தில் ஒவ்வொரு துறைக்கும் கிடைக்கக் கூடிய அல்லது கிடைக்க வேண்டிய தொகை, அரசவை அந்நோக்கத்திற்காக ஒதுக்கியதானாலும் சரி, அல்லது வேறு வகையில் அமைச்சகத்திற்கு வரப்பெற்ற அல்லது வரப்பெற வேண்டிய தொகையானாலும் சரி முன் சென்ற நிதியாண்டுக்கான ஒப்பீட்டு விவரங்களோடு கூட தரப்பட வேண்டும்.

### 2.1.6 வரவு-செலவு இடைக்கால அறிக்கை

அ) வரவு-செலவு இடைக்கால அறிக்கையின் நோக்கம் என்னவெனில், நா.க.த.அ. நடப்புநிதி கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் உத்திகள் பற்றிய அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட நிதிக் கொள்கை குறிக்கோள்களுக்கும், உத்திகளுக்கும் எதிர் நிறுத்தி நா.க.த.அ. நிதிச் செயற்பாட்டை மதிப்பீடு செய்ய இடமளிப்பதற்கான இடைக்கால தகவல் வழங்குவதாகும்.

ஆ) ஆறு மாத காலத்துக்கு ஒருமுறை நிதியமைச்சர் அந்த ஆறு மாதங்களில் நா.க.த.அ. நிதி நிலையை எடுத்துரைக்கும் விதத்தில் இடைக்கால வரவு-செலவு அறிக்கை தயாரித்து அரசவையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

### 2.1.7 வருடாந்த நிதி அறிக்கை

அ) நிதியமைச்சர் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் வருடாந்த நிதி அறிக்கை தயாரிக்க வேண்டும்.

ஆ) வருடாந்த நிதி அறிக்கை ஆனது பொருத்தமான நிதி அறிக்கைச் சட்டகங்களை மதித்து நிதியமைச்சரால் தீர்மானிக்கப்படும் வகையிலும் வடிவிலும் தயாரிக்கப்பட வேண்டும்: அதில் நியாயமாகப் பின்வரும் விவரங்கள் இடம் பெற வேண்டும்.

i. ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் நா.க.த.அ.இன் நிதி நிலைமை

ii. பொதுக் கணக்குப் பரிமாற்றங்கள், அத்துடன்

iii. அந்நிதியாண்டைப் பொறுத்தவரை பல்வேறு நா.க.த.அ. அமைச்சுகளின் ஏனைய நிதிப் பரிமாற்றங்கள்.

இ) நா.க.த.அ.இன் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட பண விபரங்கள்.

ஈ) இந்த நிதியாண்டிற்குப் பயன்படுத்தப்படாத அண்ணளவான தொகையின் அடிப்படையில் அடுத்த நிதியாண்டுக்கு அண்ணளவாக ஒதுக்கப்படும் தொகைகள்:

உ) நடப்பு நிதியாண்டில், அமைச்சர்களுக்காக முன்னீடு செய்த பணத்திலிருந்து ஈடுசெய்யப்பட்ட செலவுகள், கடப்பாடுகளின் விவரங்கள்:

ஊ) பயன்படுத்தப்படாத முன்னீட்டின் எந்தப் பகுதியையும் அடுத்த நிதியாண்டுக்கு ஒத்திச் சேர்ப்பதற்கான காரணங்கள் பற்றிய அறிக்கை:

எ) அவசரத் தேவைகளுக்காக நிதியமைச்சருக்கு முன்னீடு செய்யப்பட்ட பணத்தில் இருந்து நடப்பு நிதியாண்டில் செய்யப்பட்ட கொடுப்புகளின் விவரங்கள்:

ஏ) நா.க.த.அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உறுதியை நிறைவேற்றுவதற்காக நடப்பு நிதியாண்டில் செய்யப்பட்ட கொடுப்புகளின் விவரங்கள்:

ஐ) நா.க.த.அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உறுதியை நிறைவேற்றுவதற்கான கொடுப்புகள் என்ற வகையில் நடப்பு நிதியாண்டில் நிதியமைச்சரால் பெறப்பட்ட அல்லது மீட்கப்பட்ட பண விபரங்கள்: அத்துடன்

ஒ) வருடார்ந்த நிதி அறிக்கையை தலைமை கணக்கு தணிக்கையாளர் தணிக்கை செய்ய வேண்டும். கணக்கு தணிக்கை செய்யப்பட்ட இந்த வருடார்ந்த நிதி அறிக்கை அரசவைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்:

## 2.2 நிதி மேலாண்மை

நிதி மேலாண்மை அமைப்பின் சட்டகம் பின்வருமாறு அமையும்:

### 2.2.1 மேலாண்மை அமைப்பின் சட்டகம்

நா.க.த.அ. திரைசேரியானது காத்திரமான நிதி மேலாண்மைக் கொள்கைகளுக்கு ஏற்ப வரவு செலவைத் திட்டமிட்டு அறிக்கையிடும் சட்டகம் ஒன்றை நிறுவிப் பராமரித்து வர வேண்டும் என்பது அரசவையின் நோக்கமாகும். இதுவே தமிழீழக் குடிமக்கள் அனைவருக்கும் சீரான முறையில் நிலைத்த சமூக, பொருளியல் சேவைகளுக்கு வழி வகை செய்வதற்கான அடிப்படை ஆகிறது. நா.க.த.அ. திறைசேரியின் காத்திரமான நிதி மேலாண்மை என்பது நா.க.த.அ. மற்றும் அதன் முகமைகளில் நடவடிக்கைகள் தொடர்பாக முழுமையாகவும்

துல்லியமாகவும் உரிய காலத்திலும் நிதிவகைத் தகவல்களை அறியத்தருவதற்கு வழிவகை செய்வதாக இருக்க வேண்டும். பின்வரும் கருத்தாக்கங்கள் இந்த மேலாண்மை அமைப்பின் சட்டகமாக அமையும்.

### 2.2.2 தொகுப்பு வருவாய்

நா.க.த.அரசாங்கதிற்கு கிடைக்கப்பெறும் எல்லாவிதமான பணத் தொகைகளும் வருமானங்களும், அவற்றின் தன்மை, காரணம் அல்லது வழி எதுவாயினும்.

**2.2.3 தொகுப்பு நிதியம்**

தொகுப்பு நிதியம் எனப்படும் கணக்கு ஏற்படுத்தபடும். தொகுப்பு வருவாயில் இடம் பெறும் பணத்தொகை அனைத்தும் இந்தக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**2.2.4 பொதுக்கணக்கு**

நிதியமைச்சர் ஆனவர் அதிகாரமளிகப் பெற்ற வைப்பு நிறுவனம் அல்லது நிறுவனங்களில் நா.க.த.அ. பெயரில் பொதுக்கணக்குத் தொடங்கிப் பராமரித்தல் வேண்டும்.

பணம் சேகரிக்க உத்தியோக பூர்வ அதிகாரம் அளிக்கப்பட்ட எவரும், சேகரிக்கும் பணத்தை எதுவித கழிப்புமின்றி நியமிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் 72 மணித்தியாலத்திற்குள் விட வேண்டும்.

**2.2.5 உத்தரவாதம் அளிக்கப்பட்ட கடன் பொறுப்புகள்**

நா.க.த.அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டிய கடன் பெறல் அல்லது மற்றைய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை ஏதும் இருப்பின், இத்தகைய உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்காக நிதியமைச்சருக்கு தேவைப்படும் தொகைகள் எதும் இருப்பின் இவை அனைத்தும் தொகுப்பு நிதியத்திலிருந்து எடுத்துத் தரப்படும். இதற்காக நிதியமைச்சரினால் கொடுக்கப்பட்ட தொகை தொடர்பாக அவரால் பெறப்படும் அல்லது மீட்கப்படும் தொகைகள் ஏதும் இருப்பின் இவை அனைத்தும் தொகுப்பு நிதியத்தில் சேர்க்கப்படும்.

**2.2.6 தொகுப்பு நிதியத்திலிருந்து கடன் கொடுப்புகள்**

தொகுப்பு நிதியத்திலிருந்து கொடுக்கப்படும் கடன்களுக்கான நிபந்தனைகளையும், காலவரையரைகளையும் அவ்வப்போது நிதியமைச்சர் தீர்மானிக்கலாம்.

**2.2.7 பொதுக்கணக்குப் பேரேடு**

பின்வருவனவற்றை பதிவு செய்வதற்காக பேரேடு ஒன்றை நிறுவி பராமரித்து வரும்படி நிதியமைச்சர் உறுதி செய்ய வேண்டும்:

அ) பொதுக்கணக்கிலான கொடுக்கல் வாங்கல்

ஆ) பொதுக்கணக்கில் இருந்து ஈடு செய்ய வேண்டிய செலவுகளும் கடப்பாடுகளும்.

இ) நிதியமைச்சரினால் தீர்மானிக்கப்படும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களும் கணக்கின் நிலுவைகளும்.

**2.2.8 நா.க.த.அ. அமைச்சுத் துறைகளின் கணக்குகள்**

அ) நிதியமைச்சரின் எழுத்து வடிவிலான ஒப்புதலோடும் நிதியமைச்சரால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் இணங்கவும் நா.க.த.அ. அமைச்சுத்துறை ஒன்று அதிகாரமளிக்கப்பட்ட வைப்பு நிறுவனம் அல்லது நிறுவனங்களில் கணக்கு தொடங்கி பராமரித்து வரலாம்.

ஆ) நிதியமைச்சரினால் எழுத்து வடிவில் வேறுவிதமாக தீர்மானிக்கப் படவில்லையென்றால் இந்த பிரிவின் கீழ் தொடங்கப்பெறும் கணக்கு பொதுக்கணக்கின் பகுதியாக அமையாது.

இ) இந்தப் பிரிவின் கீழ் தொடங்கப்படும் கணக்கில் இருந்து, இதன் விதி முறைகளுக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டு அல்லாமல் பணம் எடுக்கக் கூடாது.

**2.2.9 பொதுப் பண வரவு**

நா.க.த.அ. சார்பில், ஒருவர் பொதுப்பணம் திரட்டுகிறார் அல்லது வரப்பெறுகிறார் என்றால், அவர் விதிமுறைகளுக்கும் கட்டளைகளுக்கும் இணங்க, அன்றாடம் அல்லது நிதியமைச்சர் தீர்மானிக்கக் கூடிய கால இடைவெளிகளில் அப்பணத்தை பொதுக்கணக்கில் அல்லது 2.2.8.பிரிவின் கீழ் தொடங்கப்பெற்ற கணக்கில் செலுத்திவிட வேண்டும்.

**2.2.10 பணத்தை வெளியிடுவது எப்படி**

நா.க.த.அ. தொகுப்பு நிதியத்தைச் சேர்ந்த பொதுப்பணத்தை இந்தப் பிரிவிற்கு இணங்க மட்டுமே பொதுக்கணக்கில் இருந்து எடுக்கலாம்.

அ) நிதியமைச்சர் ஒரு நிதியாண்டில் எத்தனை முறை தேவையோ அத்தனை முறை

(1) அந்நிதியாண்டில் பொதுக்கணக்கில் இருந்து கொடுக்க வேண்டியதாகக் கூடிய பொதுப்பணத்தின அளவைக் கணக்கிட வேண்டும்.

(2) இந்தப் பொதுப்பண அளவைக் குறித்துரைத்து, கீழ்க் காணும் அட்டவணை B1இல் காணப்படும் வடிவத்தில் அல்லது அதே பொருள்படும் படியான ஒரு பத்திரம் தயாரிக்க வேண்டும்.

(3) அந்தப்பத்திரத்தில் கையொப்பமிட்டு அதனை தலைமைக் கணக்குத் தணிக்கையரிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஆ) இந்தப் பத்திரம் தலைமைக் கணக்குத் தணிக்கையரின் மேற்கையொப்பமும், பிரதமரின் ஒப்புதலும் பெற்ற பின்னர், அதுவே நிதியமைச்சர் பொதுக்கணக்கில் இருந்து பணம் எடுக்க ஆணையிடுவதற்கு வழி செய்யும் உரிமைச் சான்று ஆகும்.

இ) பத்திரத்தில் மேற்கையொப்பமிடுவதற்கு முன்னதாக தலைமை கணக்கு தணிக்கையர் அதில் குறிப்பிடப்படும் தொகைகள் அப்போது சட்டப்படி கிடைக்கும் நிலையில் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேற்கையொப்பமிட்டபின்னர் தலைமை கணக்கு தணிக்கையர் அப்பத்திரத்தை நிதியமைச்சருக்கு திருப்பி அனுப்ப வேண்டும். நிதியமைச்சர் அதனை ஒப்புதலுக்காகவும் கையொப்பத்திற்காகவும் பிரதமரிடம் சமர்ப்பித்து பிறகு அதனை கோப்பிலிட வேண்டும்.

**2.2.11 பொதுக்கணக்குப் பண முதலீடு**

அ) பொதுக்கணக்கின் வரவுக் கணக்கில் இருக்கும் எந்தப் பணத்தையும் நிதியமைச்சர் முதலீடு செய்வதானால் நா.க.த.அ. அமைச்சரவைக்கும் முன்மொழிவு சமர்ப்பித்து ஒப்புதல் பெறவேண்டும். (அமைச்சரவை சார்பில்) பிரதமரும் தலைமைக் கணக்கு தணிக்கையரும் ஒப்புதல் ஆவணத்தில் ஒப்பமிட்டபின் நிதியமைச்சர் அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

ஆ) 2.2.11 (அ) பிரிவின் கீழ் முதலீடு செய்யப்பட்ட பணத்தில் இருந்து வரப்பெறுவது எதுவாயினும் 2.2.3 பிரிவில் கூறியுள்ளபடி தொகுப்பு நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டும்.

2.3 **கணக்குத் தணிக்கைச் செயலகம்**

கணக்குத் தணிக்கைச் செயலகத்தின் செயற்பாடுகள் பின்வருமாறு அமையும்

### 2.3.1 தலைமைக் கணக்கு தணிக்கையர்

கணக்காளர்-நாயகமானவர் சுதந்திரமாக செயல்படக் கூடியவராகவும், அதேசமயம் நா.க.த.அ.இன் உறுப்பினர் அல்லாத ஒருவராகவும் இருத்தல் வேண்டும். இவர் அரசவைக்கும், அமைச்சரவைக்கும், நிதித்துறை நிர்வாகம் சம்பந்தப்பட்ட தனது சுதந்திரமான, நிபுணத்துவ கருத்துக்களை வழங்குவார். சட்டபூர்வமான தேவைகளையும் மற்றும் பொது துறைகளின் வளங்களை எவ்வாறு பொருத்தமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் பயன்படுத்தலாம் போன்ற கருத்துக்களையும் இவர் வழங்குவார். கணக்காளர்-நாயகம் ஆனவர் பரிசீலனை செய்வதற்கு தேவையான கணக்குகள், பதிவுகள், ஆவணங்கள், தகவல்கள் அனைத்தையும் தடையின்றி பெற்று முழுச் சுதந்திரத்துடன் இயங்குவதற்கு உரித்துடையவர் ஆவார்.

### 2.3.2 தலைமை கணக்குத் தணிக்கையர் அமர்த்தம்

அரசவையின் முன் மொழிவின் பெயரில், பிரதமர் இவரை தெரிவு செய்வார்.

### 2.3.3 தலைமைக் கணக்கு தணிக்கையரின் பொறுப்புக்கள்

கணக்காளர்-நாயகம் தனக்குத் தேவையான நேரங்களில், தகுதி வாய்ந்தவர்களையும், பொருத்தமானவர்களையும் தனக்கு உதவிக்கு தன்னுடைய வேலைகளுக்கு அமர்த்துவார்.

### 2.3.4 தலைமை கணக்கு தணிக்கையர் பதவியில் இருந்து இடைநீக்கம்

அ) அமைச்சரவை பின்வரும் சந்தர்ப்பங்களில் கணக்காளர்-நாயகத்தை பதவியிலிருந்து இடைநீக்கலாம்.

(1) பொருத்தமற்றவர் எனக் கருதும் பட்சத்தில்

(2) கடைமையை அலட்சியம் செய்பவராக இருப்பின்

(3) நேர்மையற்ற செயல்பாடுகள் உடையவராக இருப்பின்

ஆ) அமைச்சரவை கட்டாயமாக,

(1) பதவி இடைநீக்கத்திற்கான காரணங்களை விளக்கி அறிக்கை ஒன்றினை கணக்காளர்-நாயகத்திற்கு கையளிக்க வேண்டும்.

(2) பதவி இடைநீக்கம் செய்யப்பட்டு 7 நாட்களுக்குள் அறிக்கையின் பிரதியை அரசவைத் தலைவரிடம் கையளிக்க வேண்டும்.

இ) கணக்காளர்-நாயகம் இவ்அறிக்கைக்கான பதிலை அரசவைத் தலைவரிடம் சமர்ப்பிக்கலாம்.

ஈ) கணக்காளர்-நாயகத்தை அரசவையின் தீர்மானத்தின் படி, அவரின் பதவியிலிருந்து நீக்கப் படலாம் அல்லது மீண்டும் பதவியில் அமர்த்தப் படலாம்.

### 2.3.5 தலைமைக் கணக்குத் தணிக்கையர் பதவி வெற்றிடம்

கணக்காளர்-நாயகத்தின் பதவி பின்வரும் சந்தர்ப்பங்களில் வெற்றிடமாகலாம்

அ) மரணித்தால்

ஆ) அரசவைத் தலைவரிடம் எழுத்து மூலம் பதவி விலகல் கடிதத்தை கையளித்தல்

இ) அரசவையின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டால்

### 2.3.6. பொதுநிதியில் இருந்து ஆக்கம் பெற்ற அமைப்புகள் மற்றும் திட்டங்கள் பற்றிய ஆய்வு

நிதியமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, கணக்காளர்-நாயகம் ஆனவர் பொதுப்பணத்தில் உருவாக்கப்பட்ட செயற்திட்டங்களையும், அவற்றின் சிறப்புப்பயன்களையும், லாபாகரங்களையும்

கட்டாயமாக பரிசோதிப்பார். பரிசோதனையின் முடிவுகளை, கணக்காளர்-நாயகம் ஒரு அறிக்கையாகத் தயாரிப்பார். இந்த அறிக்கையின் பிரதிகளை பிரதமருக்கும், நிதியமைச்சருக்கும் கட்டாயமாக சமர்ப்பிப்பார்.

### 2.3.7. தலைமை கணக்கு தணிக்கையரின் வருடார்ந்த அறிக்கை

கணக்காளர்-நாயகத்தின் அறிக்கையானது அவரின் கணக்கு சம்பந்தமான அவதானங்களையும், கருத்துக்களையும் நா.க.த.அ.இன் நிதி இருப்பின் அடிப்படையில் கொண்டு அமைந்திருக்கும். குறிப்பாக, இவ்வறிக்கையானது நா.க.த.அ.இன் நடப்பு நிதியாண்டு செயல்பாடுகளையும், நிதி நிலைமைகளையும் கொண்ட ஒரு குறுகிய ஆய்வாக இருக்கும். இவை, கடந்த வருடத்தின் பெறுபேறுகளையும், எதிர்கால கணிப்பீட்டு திட்டங்களையும் கொண்ட ஆய்வின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

அ) இவ் அறிக்கையானது கணக்காளர்-நாயகத்தின் அபிப்பிராயத்தின் படி,

(1) கடந்த நிதியாண்டில் நிதியமைச்சரினால் காட்டப்பட்ட கணக்குகளும், பதிவுகளும் நிதி பரிமாற்றங்களுக்கான நிதியமைச்சரானவரின் அறிக்கையை பிரதி பலிக்கின்றனவா,

(2) ஒவ்வொரு பொதுநிர்வாகத்துரையினதும் நிதி அறிக்கைகள் கடந்த ஆண்டின் நிதி நிலைமைகளையும், செயற்திட்டங்களின் பெறுபேறுகளையும், பணப்புழக்கங்களையும் பிரதிபலிக்கின்றனவா,

(3) நிதியமைச்சரானவரினாலோ அல்லது பொதுதுறைகளினாலோ கட்டுப் படுத்தப் பட்டிருக்கும், பெற்றுக்கொண்ட, செலவிட்ட, முதலீடு செய்யப்பட்ட பணம், வாங்கி விற்ற சொத்துக்கள், கொடுக்கப்பட வேண்டிய கடன்கள் போன்றவை போதியளவு நியாயமான உத்தரவாதங்கள், நிதியமைச்சரினதும் பொதுதுறைகளினதும் நிதி பரிமாற்றங்கள் சரியான முறையிலும் சட்டரீதியானவை என்பதனையும், அத்துடன்

(4) கணக்காளர்-நாயகம் ஆனவர் ஏதாவதொரு விடயத்தினை அரசவைக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ கவனத்திற்கு கொண்டு வர விரும்பின் அதைக்கொண்டு வருதல்.

ஆ) கணக்காளர்-நாயகம் பின்வரும் பிரதிகளை கட்டாயமாக அரசவைத் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.

(1) கணக்காளர்-நாயகத்தின் அறிக்கை

(2) பொதுத்துறைகளின் நிதி அறிக்கைகளும், நிதியமைச்சரானவரின் அறிக்கைகளும் முக்கியத்துவமானதாக கருதும் பட்சத்தில் அவற்றை அவர் பிரசுரிக்குமாறு அரசவைத் தலைவரிடம் பரிந்துரைக்கும் அறிக்கை.

### 2.3.8 அரசவையில் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளும் பிற ஆவணங்களும்

கணக்காளர்-நாயகத்திடம் இருந்து பெறப்பட்ட அறிக்கைகளையும் மற்றைய ஆவணங்களையும், அரசவைத் தானவர் ஆனவர், அடுத்த அமர்வின் முதல் நாளுக்கு பிந்தாமல், அவற்றை அரசவைக்கு கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

**நிதி மேலாண்மை அட்டவணை B1**

கணக்காளர் - நாயகத்திற்கு,

பின்வரும் தேவைகளுக்காக ________________________________ கெட்டியான நிதியிலிருந்து எடுக்கப்படும்____________ பொதுப் பணத்தொகை __________ என்ற கால வரையறைக்குள் கொடுப்பனவுகளுக்காக தேவைப்படுகின்றது.

திகதி:______________________ ______________________

நிதியமைச்சர்

நிதியமைச்சருக்கு,

மேற்கூறப்பட்டுள்ள பணத்தொகையை சட்டரீதியாக நீங்கள் பயன்படுத்தலாம் என்று நான் உறுதிப் படுத்துகின்றேன். கெட்டியான நிதியிலிருந்து இந்தத் தொகையை நீங்கள் எடுத்து பாவிக்கலாம் என்று இதன் மூலம் உங்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

திகதி :__________________ ______________________

கணக்காளர்-நாயகம்

திகதி: __________________ ______________________

பிரதமர்